செ.வெ.எண்: 705 நாள்: 31.10.2020

# தஞ்சாவூர் ராசாமிராசுதார் அரசு பொது மருத்துவமனை மாவட்ட ஆட்சித்தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் நேரில் ஆய்வு.

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட ராசாமிராசுதார் அரசு பொது மருத்துவமனை மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள் இன்று(31.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ராசாமிராசுதார் அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவு மற்றும் குழந்தைகளுக்கான மாவட்ட தொடக்க நிலை இடையீட்டு சேவை மையம் ஆகியவற்றை நேரில் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கண் பரிசோதனை பிரிவிற்காக புதியதாக ரூபாய் 16 கோடியே 37 லட்சம் மதிப்பிட்டில் கட்டப்பட்டு வரும் கட்டிட கட்டுமான பணியை பார்வையிட்டு பொதுப்பணித் துறை அலுவலர்களிடம் பணியை குறித்த காலத்தில் விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தினார்.

தொடர்ந்து ஒருங்கிணைந்த பேறுகால அவசர சிகிச்சைப் பிரிவு,சிசு தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவற்றை பார்வையிட்டு மகப்பேறு தாயமார்களிடம் சிகிச்சை தரம் குறித்தும்,அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டுறிந்து அனைத்தையும் செய்தது தர சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து செவிலியர்கள் தங்கும் விடுதி,துணிமணிகள் சலவை செய்யும் பிரிவு,எக்ஸ்ரே பிரிவு மற்றும் 20 லட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன வடிவமைப்பில் அமைக்கப்பட்டு வரும் சமையல் கூடம் பணி நடைபெற்று வருவதையும், அனைத்து பணிகள் விரைந்து முடித்திடவும்,விடுதிகளை தூய்மையாக பராமரித்திட அறிவுறுத்தினார்

பின்னர் மாநகராட்சி சார்பில் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் 100 ஆண்டு பழமையான கண் பரிசோதனை பிரிவு,காசநோய் பிரிவு கட்டடங்களை பராமரித்து பணி மேற்கொள்ளவும்,பணிகளை விரைந்து தொடங்கிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநகராட்சி அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். பொதுப்பணித்துறை(மருத்துவம்) அலுவலர்களிடம் மருத்துவமனை வளாகத்தில் உள்ள பழைய பயனற்று சேதமடைந்து உள்ள பழைய கட்டிடங்களை கணக்கிட்டு கட்டிடங்களை அகற்றிவிடவும்,பயனற்று பயன்பாடு இல்லாத மேல் நிலை நீர் தேக்க தொட்டியை உடனடியாக அகற்றி அவ்விடத்தில் புதிய மகப்பேறு கட்டிடம் கட்டுவதற்கு தேவையான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பிடுமாறு பொதுப்பணித்துறை(மருத்துவம்) அலுவலரிடம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள் தெரிவித்தார்.

இவ் ஆய்வின் போது தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் (பொ) மரு.மருதுதுரை ராசாமிராசுதாரர் மருத்துவமனை நிலை மருத்துவ அலுவலர் மரு.உஷா தேவி தஞ்சாவூர் கோட்டாட்சியர் திருமதி வேலுமணி,தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.ஜானகிரவீந்திரன்,மாநகராட்சி செயற்பொறியாளர் ராஜசேகரன்,பொதுப்பணித்துறை(மருத்துவம்) உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார்,உதவி பொறியாளர் திரு.வேலுசாமி,திரு.கார்த்திகேயன் மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.